O.S. No. : 92/2020

Dated: 12.01.2026

**வா.சா.1 : சித்ரா ; க/பெ. பிரதீப்**

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> :

1. இந்த வழக்கினை நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தானது எனது தகப்பனாரின் பூர்வீக சொத்து கிடையாது என்றும், கிரையம் பெற்ற சொத்து என்றும் சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எனது தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணமான வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் பழைய சர்வே எண்கள் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை எனது தகப்பனார் கிரையம் பெற்று தற்போது 37 ஆண்டுகளாகிறது என்றால் சரிதான்.

2. பிரதிவாதிகளுக்கு எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்திற்கு அருகில் அதே சர்வே எண்ணில் சொத்துக்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவாவில் பழைய சர்வே எண்கள் 78, 39 மற்றும் 82 ஆகியவற்றிற்கு இணையான புதிய சர்வே எண் 114/1 என்று கூறியுள்ளதை நிரூபிக்க இந்த வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் 6 தனி நிலத்துண்டுகளாக உள்ள நிலையில் இதுநாள்வரை தாவா சொத்துக்களை பொறுத்து உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி வாதிகளாகிய எங்களை தவிர தாவா சொத்திற்கு மற்ற கூட்டுப்பட்டாதாரர்களும் உள்ளார்கள் என்றால் சரிதான்.

3. சர்வே எண் 114/1-ல் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 10 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரியல்ல, 35 ½ செண்ட் மட்டும்தான். நான் வழக்கிற்காக சர்வே எண் 114/1-ன் மொத்த விஸ்தீரணம் 35 ½ செண்ட் என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**(வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2026.01.29 12:50:30 +0530